Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# பஞ்சவீரர் வழிபாடும் படிமக்கலைக்கூறுகளும்

Dr.S.Kavitha
Lecturer in History,Govt.Arts and Science College ,
(W) Orathanadu.

36

**ஆய்வுச்சுருக்கம் :**

தமிழகத்தில் வழிபாட்டு முறையின் தோற்றம் வளர்ச்சிப் பற்றி இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.மேலும் வழிபாட்டு வளர்ச்சியினால் ஏற்பட்ட சமய பிரிவு பற்றியும் குறிப்பாக வைணவ சமய வழிபாடு பற்றி விளப்பட்டுள்ளது. ஆகம வழிபாட்டு முறையினால் ஏற்பட்ட பாஞ்சராத்ர ஆகம முறைகளும் பஞ்ச வீரர்களின் வழிபாட்டு வளர்ச்சியும், அவர்களுக்கு கோயில் எடுப்பித்தமை, மற்றும் படிமக்கலை கூறுகளின் விளக்கம் பற்றியும் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

**முன்னுரை:**

தமிழகத்தில் பஞ்சவீரர் வழிபாடு என்பது மிகவும் குறிபிடத்தக்க ஒன்றாகும்.பொதுவாக வைணவ ஆகமங்கள் இரண்டு வகைகளாக பிரிக்கபடுகிறது. அவற்றில் ஓன்று பாஞ்சராத்ர ஆகமம் இரண்டு வைகானாசாகாமம் என்றும் அழைக்கபடுகிறது.இவற்றில் பஞ்சவீரர் வழிபாடு என்பது பாஞ்சராத்ர ஆகம வழிபாட்டு முறைப்படி வழிப்படப்பட்டு வருகிறது. இத்தகைய வழிபாடானது தமிழகத்தில் எவ்வாறு வளர்ச்சி பெற்று வருகிறது என்பதை வரலாற்றுச் சான்றுகள் மற்றும் படிக்கலைக் கூறுகள் மூலம் நாம் இக்கட்டுரையில் காண்போம்.

**வழிபாடு தோற்றம்:**

தமிழ்நாட்டில் வரலாற்றுக் காலத்திற்கு முன்பு வாழ்ந்த பழைய கற்கால மனிதர்கள் கல், மலை,மரம், பாம்பு போன்றவற்றை வணங்கினர். மேலும் உருவமற்ற கல்லை முதலில் வணங்கியவர்கள் பின்னர் அதனை வடிவமைக்கும் முறையினை அறிந்து கொண்டனர். ஆற்றோரங்களில் தங்கி வாழும் போது தமக்குத் தேவையான பாத்திரங்களை மண்ணில் செய்ய கற்றுக்கொண்டனர். அதனடிப்படையில் தெய்வ உருவத்தையும் மண்ணில் செய்ய தொடங்கினர். பின்னர் மரத்திலும் கல்லிலும் நன்கு வடிவமைக்க கற்றுக்கொண்டனர். புதியகற்காலத்தில் கற்களை வழவழப்பாக்கும் முறையினைத் தெரிந்து கொண்ட மனிதன் பெறுங்கற் காலத்தில் அவற்றை வடிவமைத்து வழிபடும் முறையினை கற்றுக்கொண்டனர்.1 ஆதிகாலத்தில் கோயிலின் கருவறையில் சிற்பங்களின்றி குறிப்பிட்ட அடையாளங்களை மட்டுமே வைத்து வழிப்பட்டனர். உதரணாமாக முருகக்கோயிலிள் வேலாயுத்தையும், சிவன்கோயில்களில் சூலாயுத்தையும் விஷ்ணுகோயில்களில் சக்கரயுத்தையும் வைத்து வழிப்பட்டனர்.

**அடிகுறிப்பு:**

**1.இரா.நாகசாமி,தமிழ்நாகரிக வரலாறு பக்கம், 46**

காலப்போக்கில் மனிதனின் அறிவுத்திறன் வளர்ச்சியால் உலோகங்களை உருக்கிச் சிற்பம் செய்யும் முறையினைக் கண்டு பிடித்தனர். அவ்வகையில் சிற்பவளர்ச்சிக்கு ஏற்ப வழிபடும் முறைகளையும் வளர்த்தனர்.

**வைணவமும் வழிபாடும் :**

வைணவ மரபில் படிமங்களை வழிபடும் நோக்கத்தின் அடிப்படையில் அவை முறையே பாலகம் (குழந்தைத் திருமேனி ), யௌவனம் ( இளமைத் திருமேனி ), விருத்தம் (வயதான கோலத் திருமேனி ), என்று பிரிக்கபடுகிறது. இவை முறையே இன்பம் பெறுதற் பொருட்டும், வீடுபேறு பெறுதற் பொருட்டும், சுகயோகங்ளைப் பெறுதற் பொருட்டும் வழிபடுவதாகும். மேலும் வைணவக் கோயிலின் கருவறையில் அமைக்கப்படும் படிமம் நின்ற நிலைப் படிமத்தை ராஜஸ பாவம் என்றும், அமர்ந்த நிலைப் படிமத்தை தாமஸ பாவம் என்றும், சயணப் படிமத்தைச் சாத்வீக பாவம் என்றும் குறிபிடப்படுகிறது.

**வரலாற்றுச்சான்றுகள் :**

இந்தியாவில் பஞ்சவீரர்கள் வழிபாடு என்பது கி.மு. முதல் நூற்றாண்டில் தோற்றம் பெற்றதாக அறியமுடிகிறது. சான்றாக வடமதுராவிற்கு ஏழு மைல் தொலைவில் மோரோ என்ற கிராமத்தில் கண்டுப்பிடிக்பட்ட கி.பி.முதல் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டைக் குறிப்பிடலாம். 2 இவற்றில் விருஷ்ணி இனத்தைச் சார்ந்த ஐம்பெறும் வீரர்களுக்கு தோசா என்ற பெண் கட்டிய கற்கோயில்களில் இச்சிலைகள் வழிப்பாட்டிற்கென வடிவமைக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. தமிழகத்தில் கி.பி.4 , 5ஆம் நூற்றண்டுகள் பஞ்ச வீரர்கள் வழிபாட்டிற்கென கோயில் கட்டப்பட்டதாகக் அறியமுடிகிறது. அதன் பிறகு கி.பி.16 ஆம் நூற்றாண்டில் இவ்வழிபாட்டிற்கென கோயில் அமைக்கப்பட்டதாக அறியமுடிகிறது.3

**பஞ்சவீரர்களும் குணங்களும் :**

பஞ்ச வீரர்கள் என்போர் (விருஷ்ணி), இடையர் என்று கூறப்படும் தொண்மை இன மக்களின் வழிபாட்டிற்குறியவர்களாகத் தொடக்க நிலையில் இருந்துள்ளனர். 4 இப்பஞ்ச வீரர்கள் நாராயணரின் பாஞ்சராத்ர கொள்கையின் வெளிப்பாடுகளிலிந்து உருவானவர்கள் என்று கூறப்படுகிறது. பொதுவாக அஹிர்புதன்யா சம்ஹிதை நாராயனரின் பாஞ்சராத்ரம் என்பதை விளக்கிடும் போது அவை பரம் (புலன் கடந்தது ), வியூகம் (வெளிப்படுவது), விபவம் (அவதாரம்), அந்தர்யாமின் ( உள்ளார்தல்), அர்ச்சம் (விக்கிரகங்களில் உள்ளது) எனும் ஐந்து நிலைகளின் வெளிப்பாடக பஞ்ச வீரர்கள் என்னும் வியூக வடிவங்கள் தோற்றம் பெற்றன என்று குறிப்பிடுகிறது.

அடி குறிப்பு:

2. K.M Suresh ,Iconography of Vishnu form khajunaho pp. 18,19.
3. **திருமங்கை ஆழ்வார் , சோழர்கள் .**
4. **பீமன் பிஹாரி மஜும்தார்** Krishna in history and legend p. 5

அவர்களில் விருஷ்ணி இனத்தைச் சேர்ந்த வாசு தேவனே தலைவனாகவும் அவருடைய அண்ணனாக சம்கர்ஷணனும் ( பலராமன் ) தோன்றினார். மேலும் வாசுதேவனுக்கும் ருக்மணிக்கும் மகனாக பிரத்யும்னன் தோன்றினான். இப்பிரத்யும்னனுக்கு அநிருத்தன், சாம்பன் என்போர் மகன்களாகப் பிறந்தனர். இவர்களின் சாம்பன் தவிர மற்ற நான்கு வியூக வடிவங்களும் வழிபாட்டிற்குக் கொண்டுவரப்பட்டன என்று கூறப்படுகிறது. வாசுதேவன் பரவாசுதேவன் என்றும், மானுச வாசுதேவன் என்றும் இரு வகைகளில் அழைக்கப்படுகிறார். இவர் ஞனம் , சக்தி, பலம், ஐஸ்வர்யம், வீரம் ஒளி மற்றும் தேசமற்ற நிலை என்னும் ஆறு குணங்களைக் கொண்டவராவார். இவற்றில் ஞனம் மற்றும் சக்தியின் வெளிப்பாடாக சம்கர்ஷணனும், ஐஸ்வர்யம் மற்றும் வீரத்தின் வெளிப்பாடாக பிரத்யம்னானும் தோன்றினர். சக்தி மற்றும் ஒளியிலிருந்து அநிருத்தர் தோன்றினார் என்றும் கூறப்படுகிறது.

**ஆகமங்கள் :**

ஆகமங்கள் என்பது இறைவனை வழிபடும் முறை பற்றியும் இறை உருவங்களைக் கோயில்களில் அமைத்திடும் முறையைப் பற்றியும் விளக்கிடும் நூல் ஆகும். 5 இதனடிப்படையில் சிவனை வழிபடும் முறையினை விளக்குவது சிவாகம் என்றும் , விஷ்ணுவை வழிபடும் முறையினை வைணவாகமம் என்றும் கூறப்படுகிறது. இவற்றில் சிவாகமம் 28 வகையாகவும், வைணவ ஆகமம் பாஞ்சராத்ர ஆகமம், வைகாணாசாகமம் என்ற இரண்டு வகையாவும் பிரிக்கப்படுகிறது.

**பஞ்சவீரர்களின் அமைவிடம்:**

பொதுவாக பஞ்ச வீரர்களின் படிமங்கள் கருவறையிலோ அல்லது தேவக்கோட்டங்களிலோ அமைக்கபடும் போது வாசுதேவன் கிழக்கு நோக்கியவாராகவும், சம்கர்ஷணன் தெற்கு நோக்கியவராகவும், பிரத்யும்ணன் மேற்கு நோக்கியவராகவும் அநிருத்தன் வடக்கு நோக்கியவராகவும் அமைக்கப்பட வேண்டும். சான்றாக மன்னார்குடி இராஜகோபாலசுவாமி கோயிலில் நான்கு வியூக வடிவங்களின் படிமங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோயிலினை அடுத்து தமிழகத்தில் பஞ்சவீரர்களுக்கென கி.பி. 1564 ல் திருவல்லிகேணியில் கோயில் எடுப்பிக்கபட்டதாக திருமங்கையாழ்வாரின் “ தொண்டைகோன்” என்ற குறிப்பின் வாயிலாக அறியமுடிகிறது.

**படிமக்களை கூறுகள்:**

படிமக்கலைக் கூறுகள் என்ற நிலையில் பஞ்ச வீரர்களின் படிமங்கள் பொதுவாக ஒரே அமைப்பாக அமைக்கப்பட வேண்டுமெனச் சிற்பரத்தினம் குறிப்பிடுகிறது. இதனடிப்படையில் இவர்கள் ஒவ்வொருவரும் நான்கு கரங்களுடன் அமைக்கபடுவர். அவற்றில் இரு கரங்களில் சக்கரம் மற்றும் சங்கினையும் முன் இரு கரங்களில் தாமரை மலர் மற்றும் கதையினைப் பிடித்தவாறும் காட்டப்பட வேண்டும். தலையில் கிரீட மகுடம் மற்றும் தோள்வளை அணிந்தவர்களாக அமைக்கப்பட வேண்டும் இருப்பினும் இப்படிமங்கள் கருவறைகளில்

தனிப்படிமங்களாக அமைக்கப்படும் (துருவ பேரங்கள் ) போது படிமங்களின் கலைக்கூறுகள் மாறுபட்டு அமைத்திருக்கும். இதனடிப்படையில் வாசுதேவன் படிமம் மூலவராக இடம்பெறும் போது இருபுறமும் திருமகள் , பூமகள் என்ற இருதேவியருடன் அமைக்கப்படலாம். மேலும் சம்கர்ஷணுக்கு ரேவதி தேவியும், அநிருத்தனுக்கு உஷாதேவியையும், பிரத்யும்னனுக்கு ரோகிணியையும், சாம்பனுக்கு இந்துகாரியையும் தேவியர்களாக அருகில் அமைக்கப்படலாம் என்று வைகாணாசாகாமம் குறிபிடுகிறது. 6

**பஞ்சவீரர்களும் ஆகமவழிபாடும்:**

பாஞ்சராத்ர ஆகமத்தின் வழிப்பாட்டு நெறிமுறைகள் என்பவை கடுமையான நெறிமுறைகளின்றி எளிதாக பின்பற்றக் கூடியதாக உள்ளது. இவர்களின் ஒரு பிரிவினர் ஸ்ரீவைஷ்ணவர்கள் எனப்பட்டனர். இவர்கள் விஷ்ணுவைவிட தாயாருக்கு (ஸ்ரீதேவி) முக்கியத்துவம் அளித்து வணங்குவர். இவ்வாகமமுறை பின்பற்றப்படும் கோயில்களில் ஆழ்வார்களுக்கு முன்னுரிமையளித்து அவர்களின் திருவுருவங்களை வைத்து வழிபடுவர். இவர்கள் ஆழ்வார்களின் வழியாக இறைவனைக் காணமுடியும் என்ற எண்ணம் கொண்டவர்கள். இவ்வாகம முறையில் உள்ள ஆலயங்களில் ஆழ்வார்களின் பாசுரங்களே வழிபாட்டின்போது ஓதப்படும் மந்திரம் ஆகும். இவர்கள் தாந்த்ரீக வழிபாட்டு முறையினைப் பின்பற்றக்கூடியவர்கள். 7

இவ்வாறு பஞ்ச வீரர்களின் தோற்றம் பற்றிப் பல்வேறு கருத்துகள் கூறப்படுகின்றன. இருப்பினும் பழங்குடியினர் இன மக்களின் வலிபாடான விருஷ்ணி என்னும் இடையர் வழிபாடானது அச்சமயத்தில் எற்ப்பட்ட இந்துமத வளர்ச்சியின் காரணமாக நாட்டுப்புற மக்களைத் தன்வயப்படுத்திக் கொண்டு இவ்வாழிபாடு பாஞ்சராத்ர ஆகமத்துடன் சேர்க்கப்பட்டு பஞ்ச வீரர்கள் வழிபாடு தோன்றியது. வாசுதேவன் விருஷ்ணி இனத்தைச் சேர்ந்தவர் என்று அஹிர்புதன்ய சம்ஹிதை குறிப்பிடுவதால் இக்கருத்து ஏற்றுக்கொள்ளத் தக்கதாக உள்ளது.

**முடிவுரை :**

இவ்வாறு தமிழகத்தில் கி.பி. 4,5 ஆம் நுற்றாண்டுகளில் தோற்றம் பெற்ற பஞ்சவீரர்களின் பாஞ்சராத்ர ஆகம வழிபாட்டுக் கலைமரபு என்பது மன்னார்குடியில் கி.பி.12ம் நூற்றாண்டில் வந்தடையும் நிலையில் வழிபாட்டின் தொடர்ச்சி இருந்ததை உணர முடிகிறது. அதனை தொடர்ந்து 16-ம் நூற்றாண்டில் திருவல்லிகேணியில் பஞ்சவீரர்களுகென கோயில் எடுபிக்கப்பட்டதையும் கருத்திற்கொண்டு பஞ்சவீரர்கள் பாஞ்சராத்ர ஆகம வழிபாட்டு முறை தமிழகத்தில் வளர்ச்சி பெற்று வருவதை நாம் அறிந்து கொள்ளமுடிகிறது.

**அடிகுறிப்பு :**

5. கோ.மு . முதுசாமி பிள்ளை , கோயிற்களஞ்சியம் , பக்கம் 5 – 6 .

6. Danial Smith Vaisnava Iconocraphy P. 116

7. தாந்ரீகம் என்பதற்கு தந்த்ரம் + மந்த்ரம் , தந்த்ரம் வெளிப்படையான பூஜையய் குறிப்பிடுகிறது. மந்த்ரம் மனதுக்குள்ளையே மனனம் செய்து வழிபடும் முறைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

BIBLIOGRAPHY:

1.Banarjea .J.N The Development of Hindu Iconography
munshira Manoharlal Publications – Newdelhi 1974.

2. Bhandarrkar R.G Vaishnavism shaivsm and minor Religios systems-1913.

3.Champagalakshmi R Vaishnava Iconography in Tamil Country
Orient long man ,Newdelhi 1981.

4. Chopra P.N and Ravendran T.K History of South india Vol-II
Medivel period S.chand and company ltd.new delhi

5. Hareil E.B Indian sculpture and Painting
Cosmo Publication, New Delhi, 1980.

6. Harle J.C Temple gateways in South India
Historical Research Institute, Bombay, 1929 .